# DHEERAN IAS ACADEMY®

(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com


## நடப்புநிகழ்வுகள் – பிப்ரவரி 2023

### தமிழ்நாடு

- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பிரிட்டனின் வாழ்நாள் சாதனை விருது அறவிப்பு.
    - பிரிட்டனில் உள்ள பல்கலைக் கழங்களில் பயின்ற இந்திய மாணவர்களின் சாதனைகளை கௌரவிக்கும் விதமாக, இந்திய-பிரிடடன் சாதனையாளர்கள் விருதை தேசிய இந்திய மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் சங்கம் பிரிட்டன் (NISA UK) இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில், பிரிட்டனின் சர்வதேச வர்த்தக் துறை உள்ளிட்டவை இணைந்து வழங்குகின்றன.

- முல்லைப் பெரியாறு அணையில் நிலநடுக்கத்தைக் கண்டறியும் கருவிகள் பொருத்தும் பணிகளை மத்திய கண்காணிப்பு துணை குழுவினர் ஆய்வு நடத்தியுள்ளனர்.

- இந்தியாவில் காற்றாலை மூலம் அதிக அளவு மின்சாரம் தாயரிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
    - தமிழகம் டிசம்பர் 31, 2022 நிலவரப்படி 41,929 மெகாவாட் மின் உற்பத்தி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- பேருந்தின் தடம், பயண நேரத்தினை பயணிகள் அறியும் விதமாக அரசு விரைவுப் பேருந்துகளில் "சென்னை பஸ் செயலி" என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழக அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சி வழங்க ரூ.18.38 கோடியை "ராணி லட்சுமிபாய் தற்காப்புக் கலைபயிற்சிக் திட்டம்" கீழ் மத்திய கல்வி அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

- பிப்ரவரி 7-ல் செந்தமிழ் சொற்பிறப்பியில் அகரமுதலித் திட்ட இயக்குநரும், சொல்லாராய்ச்சி வல்லுநனருமான தேவநேயப் பாவணர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

- தமிழகத்தில் முதன் முறையாக மதுரை மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு ஒலி, ஒளி வசதியுடன் கூடிய எண்ம (டிஜிட்டல்) நூலகம் அமைக்கப்பட உள்ளது.

- தமிழகத்தில் 9-14வயது வரை உள்ள சிறுமிகளுக்கு கர்ப்பப்பை வாய் புற்று நோய் தடுப்பூசிகளை (ஹெச்பிவி) பள்ளிகளிலே செலுத்த நடடிவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.
    - உலக அளவில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக கர்ப்பப்பை வாய்புற்று நோய்க்குத்தான் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.
    - உலக அளவில் இந்தியாவில் 25% (80,000 பேர்) பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்.

- காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றி வடிவமைக்கப்பட்ட மின் வாகன கொள்கையின் மூலம் சென்னை, மதுரை சேலம், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 6 நகரங்களை மின் வாகன நகரங்களாக மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    - சாலை வரி விலக்கு, பதிவு கட்டணம் தள்ளுபடி ஆகிய பயன்கள் 2025ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- “சிற்பி” திட்டதின் கீழ் அரசு பள்ளியைச் சேர்ந்த 5,000 மாணவிகளை ரயில் மூலம் கல்வி சுற்றுலா அழைத்து சென்றதற்காக சென்னை காவல்துறைக்கு உலக சாதனைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
    - இதற்கு “வேர்ல்டு யூனியன் ரெக்கார்ட்ஸ்” அமைப்பு உலகச் சான்றிதழை வழங்கியுள்ளது.
    - SIRPI – Stents in Responsible Police Initiatives (14 Sep 2022)

- மார்ச் 8-ல் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தினையொட்டி மகளிருக்கான பிரத்யேக கொள்கையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட உள்ளார்
    - பெண் கல்வி இடைநிற்றலைக் குறைப்பதும், ஒவ்வொரு ஆண்டும் குறைந்த பட்சம் ஆயிரம் ஆராய்ச்சியார்களை உருவாக்குவதும் போன்றவை மகளிர் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.
    - மாநில மகளிருக்கான கொள்கை வரைவு 2021-ம் ஆண்டு டிசம்பரில் வெளியிடப்பட்டது.
    - “வாழ்ந்து காட்டு பெண்ணே” என்ற திட்டம் மூலம் மகளிர் வங்கி தொடங்கப்பட்டு பெண்களுக்கான தேவையான கடனுதவி வழங்கப்படுகிறது

- வேலூர் மாவட்டத்தில் விளையும் முள்ளு கத்தரிக்காய் புவிசார் குறியீட்டுக்கு தேர்வு.
    - மேலும் ராதாபுரம் முண்டு மிளகாய் புவிசார் குறியீட்டுக்கு தேர்வு.
    - புவிசார் குறியீட்டுத் தேர்வில்
        - முதலிடம் – கர்நாடகா (46 பொருட்கள்)
        - 2ம் இடம் – தமிழகம் (45 பொருட்கள்)
        - 3ம் இடம் – கேரளா (36 பொருட்கள்)

- இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

- மத்திய புதுப்பிக்கத்தக்க மின்துறை 31.01.2023 நிலவரப்படி நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சூரியசக்தி, காற்றாலை மின் நிலையங்களின் உற்பத்தி திறன் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- காற்றாலை உற்பத்தியில்
  - முதலிடம் – தமிழகம் (9,964 மெகாவாட்)
  - 2ம் இடம் – குஜராத் (5,269 மெகா வாட்)
  - 3ம் இடம் – கர்நாடகம் (5,012 மெகா வாட்)

➢ சூரிய மின்சக்தியில் தமிழகம் 4வது இடம் பிடித்துள்ளது
- நிகழாண்டில் ஜனவரி நிலவரப்படி தமிழகத்தில் 6,123 மெகாவாட் நிலத்திலும், கட்டங்களின் மேல் 373.73 மெகா வாட் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுள்ளது.

➢ பிப்ரவரி 27-ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக வி.லட்சுமிநாராயணன் பதவி ஏற்றுள்ளார்.
- இதன் மூலம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 58 ஆக உயர்வு

## இந்தியா

➢ 2023-24 நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 6 முதல் 6.8%மாக இருக்கும் என்று மத்திய அரசின் பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

➢ பிராஜக்ட் 39A என்ற பெயரில் "இந்தியாவின் மரண தண்டனை : ஆண்டு புள்ளி விவரங்கள் 2022" ஆய்வறிக்கையின்படி 2022-ன் படி 165 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது என அறிக்கை தெரிவிக்கிறது.

➢ பிப்ரவரி 2-3வரை அசாமின் குவஹாத்தியில் "ஜி20ன் முதல் நிலையான நிதி செயற்குழு கூட்டம்" நடைபெறுகிறது.

➢ புதுதில்லியில் உள்ள தேசிய மகளிர் ஆணையம் தனது 31வது நிறுவன தினத்தை கொண்டாடுகிறது.
- கருப்பொருள் : "சஷக்த் நாரி சஷக்த் பாரத்"
- தேசிய மகளிர் ஆணையம் உருவாக்கப்பட்ட நாள் : 31 ஜனவரி 1992
- தேசிய மகளிர் ஆணைய சட்டம் – 1990

➢ ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகரமாக விசாகப்பட்டினம் மாற்றப்பட்டுள்ளது.
- ஆந்திரா 2014-ல் ஜீன் மாதம் ஆந்திரம், தெலுங்கானா மாநிலமாக பிரிக்கப்பட்டபின் ஆந்திர மாநிலத்தின் தலைநகராக அமராவதி அறிவிக்கப்பட்டது.

➢ உயரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் படி லடாக்கின் முதல் பல்லுயிர் பல்லுயிர் பாரம்பரிய தளமாக யாயாத்சோ அறிவிக்கப்பட்டுள்ளது.

- உயரியல் பன்முகத்தன்மை சட்டம் – 2002

- மத்திய பட்ஜெட்டில் இயற்கை உரங்களை ஊக்குவிக்க “பிஎம் பிரணாம்” திட்டம் அறிவிக்கப்பட்டள்ளது.

- இந்தியா பொருளாதார வளர்ச்சியில் 10வது இடத்திலிருந்து 5வது இடத்திற்கு முன்னேறியது.

- பிப்ரவரி 18-ல் GST கவுன்சில் 49வது கூட்டம் தில்லியில் நடைபெற உள்ளது.
    - 279A விதியின் கீழ் GST கவுன்சில் உருவாக்கப்பட்டது.

- 2024 மக்களவை தேர்தலில் ஆர்விம் (தொலைவிட வாக்குபதிவு இயந்திரம்) பயன்படுத்தப்படாது என மத்திய அரசு தகவல்.
    - Remote Electronic Voting Machine (RVM) – புலம்பெயர் தொழிலாளர்கள் வாக்களிக்களிக்க தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது.

- 2022-23 நிதியாண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து அதிக ஏற்றுமதி செய்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடம்.

- உச்சநீதிமன்றத்தில் 5 புதிய நீதிபதிகள் தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.
    - பங்கஜ் மித்தல் – ராஜஸ்தான் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
    - சஞ்சய் கரோல் – பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
    - பி.வி.சஞ்சய் குமார் – மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
    - அசானுதீன் – பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
    - மனோஜ் மிஸ்ரா – அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஆகிய ஐவரும் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றுள்ளனர்.

- வாடகைத் தாய்க்கும், அவர் மூலம் பிறக்கும் குழந்தைக்கும் மரபணுரீதியாக தொடர்பில்லை என்று வாடகைத் தாய் சட்டம் கூறுவதாக மத்திய அரசு உச்சநீதி மன்றத்தில் தெரிவித்துள்ளது.
    - வாடகைத் தாய் ஒழுங்காற்று சட்டம் – 2021
    - இனபெருக்க உதவி தொழில் நுட்ப ஒழுங்காற்று சட்டம் – 2021 ஆகியவற்றின் சில பிரிவுகளுக்கு எதிராகவும் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- உலகின் முதல் வாழும் பாரம்பரிய பல்கலைக்கழகமாக கொல்கத்தாவின் விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தை யுனெஸ்கோ அறிவிக்க உள்ளது.
    - இப்பல்கலைகழகத்தை நேபால் பரிசு பெற்ற முதல் இந்தியரான ரவீந்திரநாத் தாகூர் உருவாக்கினார்.
    - யுனஸ்கோ – UNESCO – United Nations Educational, Scientific and Cultural Organization
    - தலைமையிடம் – பாரிஸ், பிரான்ஸ்
    - அமைக்கப்பட்ட ஆண்டு – 16.11.1945

- பிப்ரவரி 18ல் தென் ஆப்பிரிக்காவில் இருந்து மேலும் 12 சிவிங்கி புலிகள் மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவிற்கு வருகை தர உள்ளன.
    - 1947-ல் சதீஸ்கர் மாநிலத்தில் கொரியா மாவட்டத்தில் ஒரு சிவிங்கி புலி இறந்தது. இதனால் 1952-ல் இந்தியாவில் சிவிங்புலி இல்லை என அறிவிக்கப்பட்டது.
    - 2022 செப்டம்பர் 17ல் பிரதமர் மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு நமீபியாவில் இருந்து 8 சிவிங்கி புலிகள் விடுவிக்கப்பட்டன.

- உலக மகிழ்ச்சி குறியீட்டில் இந்தியா 136வது இடம் பிடித்துள்ளது
    - முதலிடம் – பின்லாந்து (5வது முறையாக)
    - இரண்டாவது இடம் – டென்மார்க்
    - மூன்றாவது இடம் – சுவிட்சர்லாந்து

- நாட்டின் மிக நீண்ட விரைவுச்சாலை டெல்லி-மும்பை இடையே (1,386km) அமைக்கப்படுகிறது.

- உலகளவில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரங்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தை பெங்களூர் பிடித்துள்ளது.
    - முதலிடம் – லண்டன்
    - 6வது இடம் – புனே
    - 34வது இடம் – டில்லி
    - 47வது இடம் – மும்பை
    - ஜியோலொகேஷன் நடத்தியுள்ள இந்த ஆய்விற்கு “டாம்டாம் போக்குவரத்து நெரிசல் பட்டியல்” என அழைக்கப்படுகிறது.

- 2022-ம் ஆண்டில் அதிக கார்பன் மாசுவை வெளியிட்டுள்ள நகரங்களில் 5 இடத்தை பெங்களூரு பிடித்துள்ளது.

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அறிமுகப்படுத்திய “இ-சஞ்சீவின்” திட்டத்தில் பயனடைந்ததில் தமிழகம் இரண்டாம் இடம் பிடித்துள்ளது
    - இத்திட்டத்தில் 10 கோடி பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
    - பயனடைந்ததில் ஆந்திரா முதலிடம், மேற்கு வங்காளம் மூன்றாவது இடம் பிடித்துள்ளது.
    - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை – 1947

- தில்லியில் “ஆதி மகோத்சவ் எனும் தேசிய அளவிலான பிரம்மாண்ட பழங்குடியினர் திருவிழாவினை பிரதமர் துவக்கி வைத்தார்.
    - பழங்குடியின சுதந்திர போராட்டத் தலைவர் பிர்சா முண்டாவின் பிறந்த தினத்தை “பழங்குடியினர் பெருமை தினமாக” கொண்டாடப்படுகிறது.
    - “வன் தன்” திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 3,000-க்கும் மேற்பட்ட மையங்கள் நிறுவப்பட்டு பொருள்களின் மதிப்புக்கூட்டுதல் மூலம் பழங்குடியினர் வருவாய் உறுதி செய்யப்படுகிறது.

- பிஎம்-விகாஸ் (பிரதமரின் விஸ்வகர்மா கௌஷல் சம்மான்) திட்டத்தால் பழங்குயினரிடையே கைவினைத் திறன் மேம்படுத்தப்படுகிறது.
- 2014-ல் 80-ஆக இருந்த எகலைவ மாதிரிப்பள்ளிகள் எண்ணிக்கை 2022-ல் 500-ஆக உயர்ந்துள்ளது.

➢ ஆதார் சந்தேகங்களுக்கு பதில் தரும் ஆதார் மித்ரா எனும் செயற்கை நுண்ணறிவு (AI Chatbot)ஐ இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பு (UIDAI) அறிமுகப்படுத்தியுள்ளது.
- UIDAI – Unique Identification Authority of India
- உருவாக்கப்பட்ட ஆண்டு – 29.01.2009
- ஆதார் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு – 2016

➢ தமிழகத்தில் நீர்நிலைகளில் நீர்மட்டம் உயரந்துள்ளதால், நிகழாண்டு கோடை காலத்தில் குடிநீர்த் தட்டுபாடு இருக்காது என தெரிவிக்கப்பட்டள்ளது.
- உலகத்தில் நிலத்தடி நீர் பயன்படுத்துவதில் இந்தியா முதலிடம்.
- இந்தியாவில் நிலத்தடி நீர் பயன்படுத்தவதில் தமிழகம் முதலிடம்

➢ கடந்த 2022-ம் ஆண்டு இந்தியாவில் அதிக அளவாக 15,561 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது.
- இதில் தமிழகம் இரண்டாம் இடம் வகித்துள்ளது.
- தெலுங்கானா, தில்லி ஆகிய மாநிலங்கள் முதலிடம்
- கடந்த ஆண்டுகளை விட 27% அதிகம்.

➢ மத்திய பிரதேசத்தின் குனா தேசிய பூங்காவிற்கு 12 சிவிங்கிப்புலிகள் (சீட்டா) தென் ஆப்பிரிக்காவிலிருந்து வருகை.

➢ 2025-ஆம் ஆண்டுக்குள் உயர் ரத்த அழுத்த நோயை 25% குறைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்தாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

➢ நிதி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான பி.வி.ஆர்.சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது பதவி வகித்த பரமேஸ்வரன் ஐயர் உலக வங்கியின் செயல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நிதி ஆயோக் தலைவராக பி.வி.ஆர்.சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ அகமதாபாத்-மும்பை இடையே நாட்டின் முதலாவது புல்லட் ரயில் திட்டத்தை 2026-ல் செயல்படுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2051-ல் இத் திட்டம் செயல்படுத்த வாய்ப்புள்ளது
- 508 கி.மீ. தூரத்திற்கு ரூ1.08 லட்சம் கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- புல்லட் ரயில் 260கி.மீ. முதல் அதிகபட்சமாக 320 வேகம்-தில் செல்கிறது.
- ஜப்பானின் ஷின்கான்சென் தொழில் நுட்பத்தில் இந்த ரயில் இயக்கப்படுகிறது.

- தற்போது 170 கி.மீ. வேகத்தில் வந்தே பாரத் இரயில் இயங்கி வருகிறது.
- தேசிய அதிவேக ரயில் கழக நிறுவனம் – 2016-ல் தொடங்கப்பட்டுள்ளது.

- களக்காடு முண்டந்துறையில் சுற்றுச்சூழல் பூங்காவுடன், உயிர் பன்மை அருகாட்சியம் மற்றும் பாதுகாப்பு மையம் அமைப்பதற்கு தமிழக அரசு உத்தரவு.
    - களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பம் (முதல் புலிகள் காப்பகம்) அமைக்கப்பட்ட ஆண்டு – 1976
    - இங்கு 14 ஆறுகள் தோன்றுவதால் “நதிகள் சரணாலயம்” எனவும் அழைக்கப்படுகிறது.

- பிப்ரவரி 23-ல் உச்சநீதிமன்ற தீர்ப்புகளை எளிதில் அடையாளம் காணவும், மேற்கொள் காட்டவும் அனைத்து தீர்ப்புகளுக்கு “தனிக் குறியீடு எண்” அளிக்கும் நடைமுறையை உச்சநீதிமன்ற நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அறிமுகம் செய்து வைத்தார்.
    - இந்த பணியை மேற்கொள்ள 3 உயர்நீதிமன்ற நீதிபதிகளை கொண்ட குழு அமைக்கப்பட்டள்ளது.
    - 30,000 தீர்ப்புகளுக்கு இந்த குறியீடு வழங்கப்படும்.
    - ஏற்கனேவே தில்லி, கேரள உயர்நீதிமன்றங்களில் இம்முறை செயல்பட்டு வருகிறது.
- சர்க்கரை நோய் பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு 22.3%-உடன் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.
    - முதலிடம் – கேரள மாநிலம் (24.4%)
    - மூன்றாமிடம் – ஆந்திரா (22.7%)
    - யூனியன் பிரதேசத்தில் கோவா (22.7%), புதுச்சேரி (22%), லட்சத்தீவுகள் (21.9%) முறையே முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.
    - சர்க்கரை நோயால் நாடு முழுவதும் 19 கோடி பேருக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளன. சர்க்கரை நோயின் உலகின் தலைநகரமாக இந்தியா உருவெடுத்துள்ளது.

- கேரள மாநிலம் குருவாயூரில் புதைசாக்கடைகளில் நுழைந்து கழிவுகளை அகற்றும் பணிகளுக்கு ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் புதைசாக்கடைகளில் கழிவுகளை அகற்ற ரோபோக்களை பயனபடுத்திய முதல் மாநிலம் கேரளம் என்ற பெருமையை பெற்றுள்ளது.
    - 2018-ல் திருவனந்தபுரத்திலும் பின் எர்ணாகுளம், குருவாயூரில் கழிவுகளை அகற்ற ரோபோ பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## சர்வதேச நிகழ்வுகள்

- பிப்ரவரி 14ல் அமெரிக்கா நியூயார்க் நகரில் ஐ.நா. தலைமை அலுவலகத்தில் இந்தியா சார்பில் நடத்தப்படும் சிறுதானியங்கள் கண்காட்சி தொடங்கியுள்ளது.
    - சிறுதானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக 2023-ல் கொண்டாடப்படுகிறது.

- இராணுவத்திற்கு நிதி ஒதுக்குவதில் இந்தியா மூன்றாம் இடம் பிடித்துள்ளது.
    - அமெரிக்கா முதலிடமும், சீனா இரண்டாவது இடமும் பிடித்துள்ளது.

DHEERAN IAS ACADEMY

- இந்தியாவிற்கு ஆயுதங்களை விநியோகம் செய்வதில் ரஷ்யா முன்னிலையில் உள்ளது.

- யூடியூப் சிஇஓ-ஆக இந்திய வம்சாவளியை சேர்ந்த நீல் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருதுகள்

- திருச்சியை சேர்ந்த மாணவியான வி.ஏ.ஜென்னி பிரான்ஸினா "ராக்ஷா மந்திரி" விருதினை பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.
  - இவ்விரு மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது.
  - தமிழகம் 12 ஆண்டுகளுக்கு பிறகு இவ்விருதினை பெற்றுள்து.
  - பிஷப் ஹீபர் கல்லூரியல் பி.எஸ்.சி வேதியியல் இளநிலை மூன்றாம் ஆண்டு மாணவியான இவர் தேசிய மாணவர் படையின் கேடட் கீழ் அதிகாரியாக (சியுஓ) இவ்விருதை பெற்றுள்ளார்.

- யுனெஸ்கோ அமைதிக்கான விருதினை ஜெர்மெனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலே மெர்கல் பெற்றுள்ளார்.

- ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் வாழ்நாள் சாதனையாளர் விருது மாநிலங்களவையின் முன்னாள் மார்கசிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி.கே.ரங்கராஜனுக்கு வழங்கப்பட உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- ரூ.24,000 கோடியில் ஆளில்லா சிறிய ரக விமானமான எம்க்யூ-9பி என்ற தாக்குதல் ட்ரோன்களை இந்தியா அமெரிக்காவிடம் வாங்க திட்டமிட்டுள்ளது.

- இஸ்ரோ-நாஸா கூட்டு முயற்சியல் உருவாக்கப்பட்ட நிஸார் செயற்கைக்கோள் இம்மாதத்தின் இறுதியில் இந்தியா வருகிறது.
  - பூமியின் நிலம் மற்றும் பணிப் பரப்பை துல்லியமாக கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.
  - 2014-ல் தொடங்கப்பட்ட இச் செயற்கைகோள் 2,800 கிலோ எடை கொண்டது.

- வியாழன் கிரகத்தின் 12 புதிய நிலாக்கள் அமெரிக்க வானியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - 92 நிலாக்கள் - வியாழன்.
  - 83 நிலாக்கள் -சனி.

- பெங்களூரில் நடைபெற்ற இந்திய எரிசக்தி வாரத்தில் இந்தியன் ஆயில் நிறுவனம் தயாரித்துள்ளபாலியெஸ்டர் (ஆர்-பெட்) மற்றும் பருத்தியால் தயாரிக்கபட்பட்ட சீருடைகளை பிரதமர் மோடி அறிமுகம் செய்துள்ளார்.
  - பிளாஸ்க் பாட்டிலிகளின் மறுசுழற்சியில் இந்த ஆடை உருவாக்கப்பட்டுள்ளது.

- செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தளமான "சாட் ஜி.பி.டி"-க்கு போட்டியாக "பார்ட்" என்னும் தளத்தை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
    - சாட் ஜி.பி.டி – 2022 செப்டம்பரில் அறிமுகம் செய்யப்பட்டது.

- உலகிலேயே முதன் முறையாக உயிரி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மோப்பம் பிடிக்கும் ரோபோக்களை இஸ்ரேல் அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவில் முதல் முறையாக லித்தியம் இருப்பு ஜம்மு & காஷ்மீரில் கண்டுபிடிக்கபட்டுள்ளது.

- இந்தியாவில் முதல் முறையாக திடக்கழிவுகளில் இருந்து ஹைட்ரஜன் எரிபொருள் தயாரிக்கும் திட்டம் மகாராஷ்டிரம் புனேயில் தொடங்கப்பட உள்ளது.
    - பிளாஸ்மா வளிமயமாக்கல் தொழில் நுட்பத்தில் இந்த ஆலை செயல்பட இருக்கிறது.

- நாடு முழுவதும் அரசு, தனியார் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் மாணவர்களின் முயற்சியில் உருவான அப்துல் கலாம் செயற்கைக்கோள்கள் சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பட்டிபுலம் என்ற இடத்திலிருந்து ஏவப்பட்டது.

- பிப்ரவரி 19-ல் இந்தியாவின் முதல் ஹைபிரிட் சவுண்டிங் ராக்கெட் 150 செயற்கைகோளுடன் மாமல்புரத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

- மரபுசாரா ஆற்றல் மூலங்கள் வாயிலாக 2030-ம் ஆண்டுக்குள் 500 ஜிகா வாட் எரிசக்தியை உற்பத்தி செய்ய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் (ஐபிஏ) வெளியிட்டுள்ள தரவரிசை பட்டியலில் இந்தியா 3வது இடம் பிடித்துத்துள்ளது.
    - முதலிடம் – கஜகஸ்தான்
    - இரண்டாவது இடம் – உஸ்பெகிஸ்தான்

## முக்கிய தினங்கள்

- இந்திய கடலோர காவல்படை தினம்- பிப்ரவரி 01

- உலக ஈரநில தினம்.- பிப்ரவரி 02
    - கருப்பொருள் : It's Time for Wetland Restoration

- உலக புற்றுநோய் தினம். (பிப்ரவரி 04)
    - கருப்பொருள் : "Close the Care Gap"
    - 2000 முதல் உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

- பிப்ரவரி 13-17 வரை இந்திய ரிசர்வ் வங்கி நிதிக் கல்வியறிவு விழப்புணர்வு வாரத்தை கடைபிடித்துள்ளது.

- உலக தாய்மொழி தினம் – பிப் 21
  - கருப்பொருள் : Multilingual Education – a Necessity to transform Education

- தேசிய அறிவியல் தினம்
  - Theme : "Global Science for Global Wellbeing"

-------------

தீரன் ஐ.ஏ.எஸ். அகாடமி
DHEERAN IAS ACADEMY